

ing months, especially targeting China and, of course, Bangladesh.

**Farmers stand to gain**

Tightening fundamentals in the world market would also mean a tendency for prices to remain firm. Any increase in the export price is sure to trickle down to growers. It is necessary that policymakers do not tinker with the cotton export policy, but encourage it.

India has a negative trade balance with China; and this year, cotton presents an opportunity to narrow the trade gap. The Commerce Ministry must actively support efforts to maximise cotton exports in the months ahead.

The OECD-FAO Outlook for cotton projects that India will remain the world's largest producer of the natural fibre over the next ten years even as we become the world's largest for mill consumption. This projection means that our production efforts must continue in a manner that domestic mill demand is fully met and a genuine export surplus is generated. This is particularly important given the fragility of our agriculture.

So, the government must focus attention on policies that encourage an increase in productivity and production. Technology fatigue, if any, may become a big challenge. Given the sector's employment and income generating potential along the value chain, it is important that cotton receives policy support, technology support and investment support so as to enhance stakeholder value.

*The writer is a policy commentator and global agribusiness specialist. Views are personal*

, and
a will
about
ent to
onnes.
ee has
recent
mpetit-
on. The
naxim-
e com-

rage
at
ard

iounced
ce that
actories
wers for
leaf in
Nilgiris

Director
rice was
onsolid-
ge price
ght-leaf

field of-
ensure
ctory in
ess than
hases in
is ₹1.50
ge price
3 per kg
ixed for

nly par-
ve been
ations –
average
month;
e based
the auc-
th con-
jarajan,
Bought
' Associ-
e.

WEEKLY OUTLOOK

# MCX Lead moves sideways with a positive bias

**YOGANAND D**
BL Research Bureau

The lead futures contract on the Multi Commodity Exchange (MCX) has been consolidating sideways for the past one month. Following a medium-term downtrend, the contract found support at its 52-week low, recorded at₹137 a kg in mid-August 2018.

Since then, the contract has been trending upward. Within this uptrend, the contract has been in a sideways movement in the band between ₹142 and ₹152. On Monday, the contract surged 2.4 per cent breaching the 21- and 50-day moving averages. Currently, the contract trades near the upper boundary at ₹151.7 with a positive bias.

The daily relative strength index is on the brink of entering the bullish zone from the neutral region and the weekly RSI feature in the neutral region.

The daily as well as weekly price rate of change indicators feature in the positive territory implying buying interest. A conclusive break-out of the upper boundary can strengthen the uptrend that has been in place since mid-August. In such a scenario, the contract can extend the up move to ₹155 and then to ₹157 in the short term.

A further rally beyond ₹157 can take the contract northwards to ₹160, which is a key medium-term resistance level.

Inability to move beyond ₹152 could keep the contract range-bound for a while. Key supports within the range are at ₹147 and ₹145.

On the other hand, a decisive plunge below the lower boundary at ₹142 can drag the contract down to ₹140 and ₹137.

Traders with a short-term perspective should remain on the sidelines as long as the contract is range-bound. Fresh long positions can be initiated on a decisive rally above ₹152 with a fixed stop-loss.

*Note: The recommendations are based on technical analysis and there is a risk of loss in trading.*


is developing DDW Field, HPHT Asset, ONGC invites "parties to prequalify" for providing **Consultancy Services, for wells in JV block KG-OSN-2001/3** from reputed service providers.**Time schedule for commencement of services:**As mentioned in the PQC/Tender document. **Place of execution of the Contract:**KG-OSN-2001/3 Block, HPHT Asset, ONGC, Kakinada, Andhra Pradesh,India. **Documents for Submission:**Documents as desired in PQC are needed to be furnished, with necessary compliances.**Date and place of submission of documents:**Within 10 calendar days from date of this Publication, Kakinada. **For downloading the PQC and Appendixes:**Visit tender website: **https://tenders.ongc.co.in**

TATA

**TATA COFFEE LIMITED**
(CIN: L01131KA1943 PLC000833)
Regd. Office: Pollibetta - 571 215, Kodagu, Karnataka.
Ph.: 08274 - 251 411, Fax No: 08274 - 251 425
Email : investors@tatacoffee.com
Website: www.tatacoffee.com

NOTICE

Notice is hereby given pursuant to Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 that a meeting of the Board of Directors of the Company will be held on Thursday, the 25th October, 2018 inter-alia, to consider the Financial Results of the Company for the quarter ended 30th September, 2018.

This Notice is also available on the Company's website at www.tatacoffee.com and on the website of Stock exchanges at www.bseindia.com and www.nseindia.com

By Order of the Board
Place: Bangalore — **Anantha Murthy N**
Date: 4th October, 2018 — Head - Legal & Company Secretary

IDFC

IDFC LIMITED

**IDFC Limited**

**CIN:** L65191TN1997PLC037415 **Email:** info@idfc.com **Website:** www.idfc.com
**Registered Office:** KRM Towers, 7th Floor, No. 1, Harrington Road, Chetpet, Chennai - 600 031, **Tel:** +91 44 4564 4000 **Fax:** +91 44 4564 4022
**Corporate Office:** Naman Chambers, C-32, G-Block, Bandra – Kurla Complex, Bandra - East, Mumbai – 400 051. **Tel:** +91 22 4222 2000 **Fax:** +91 22 2654 0354.

**NOTICE**

Pursuant to Regulation 29(1) read with Regulation 47(1)(a) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, notice is hereby given that the 125th meeting of the Board of Directors of IDFC Limited will be held on **Tuesday, October 30, 2018** at Mumbai to discuss and approve, among other items, the unaudited financial results (subjected to limited review by Auditors) for the quarter and half year ended September 30, 2018.

The Company will hold investor/analysts call on the unaudited financial results on Wednesday, October 31, 2018. The notice of this meeting is also available on the Company's website www.idfc.com and also on the Stock Exchange's website viz National Stock Exchange of India Limited www.nseindia.com and BSE Limited www.bseindia.com.

For **IDFC Limited**
**Sd/-**
Place : Mumbai, — **Amol Ranade**
Date : October 4, 2018 — Company Secretary

IDFC

IDFC BANK

**IDFC Bank Limited**

**CIN:** L65110TN2014PLC097792 **email:** bank.info@idfcbank.com **website:** www.idfcbank.com
**Regd. Office:** KRM Tower, 7th Floor, No. 1, Harrington Road, Chetpet, Chennai - 600 031
**Tel:** +91 44 4564 4000 **Fax:** +91 44 4564 4022
**Corp. Office:** Naman Chambers, C-32, G-Block, Bandra-Kurla Complex, Bandra-East, Mumbai-400 051.
**Tel:** +91 22 7132 5500 **Fax:** +91 22 2654 0354.

**NOTICE**

Pursuant to Regulation 29 read with Regulation 47(1)(a) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, notice is hereby given that a Board Meeting of IDFC Bank Limited (the 'Bank') will be held on **Wednesday, October 24, 2018** at Mumbai to discuss and approve, among other items, the Unaudited Financial Results (subjected to Limited Review by Auditors) of the Bank for the quarter and half year ended September 30, 2018.

The Bank will hold investor / analyst call on the aforesaid financial results on Thursday, October 25, 2018. Notice of the aforesaid meeting and details of the call will be published on the Bank's website (www.idfcbank.com) and on the website of National Stock Exchange of India Limited (www.nseindia.com) and BSE Limited (www.bseindia.com).

For **IDFC Bank Limited**
**Sd/-**
**Mahendra N. Shah**
Place : Mumbai — Group Company Secretary &
Date : October 04, 2018 — Group Compliance Officer

# அண்ணா தி.மு.க. நிர்வாகி மறைவுக்கு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி இரங்கல்

சென்னை, அக்.5–

அண்ணா தி.மு.க. நிர்வாகி ஆர். மதியழகன் மரணமடைந்தார்.

இதையொட்டி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதல்வருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

‘‘திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், செங்கம் ஒன்றிய செயலாளர் ஆர்.மதியழகன் உடல் நலக் குறைவால் மரணமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றோம்.

புரட்சித்தலைவி அம்மா மீது மிகுந்த விசுவாசம் கொண்டு பணியாற்றி வந்த ஆரம்ப கால கழக உடன்பிறப்பு மதியழகன், கடந்த பல ஆண்டுகளாக ஒன்றிய செயலாளராகப் பணியாற்றி வருபவர். மேலும் ஊராட்சி மன்றத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

அன்புச் சகோதரர் மதியழகனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.’’

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூறியுள்ளனர்.

# மழை வெள்ளத்தை சமாளிக்க அரசு தயார் நிலை: புதுவை முதலமைச்சர் பேட்டி

புதுவை ,அக்.5 –

புதுவை மழை வெள்ளத்தை சமாளிக்க அரசு தயார் நிலையில் உள்ளது என்று முதலமைச்சர் நாராயணசாமி கூறினார்.

புதுவை – காரைக்காலில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்கிறது.

முதலமைச்சர் நாராயணசாமி மழை பாதித்த பகுதிகளை சுற்றிப்பார்த்து மக்களுக்கு நிவாரண உதவிகள் செய்ய உத்தரவிட்டார். அப்போது அவர் பேட்டியளித்தார். அவர் கூறியதாவது:–

தாழ்வான பகுதியில் தேங்கிய மழை வெள்ளத்தை சமாளிக்க அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசு அதிகாரிகளை கொண்ட 2 குழுக்கள் அமைத்துள்ளோம். அதில் அனைத்து அதிகாரிகளும் இருக்கிறார்கள்.

அவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பார்கள்.

கலெக்டர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை தயாராக உள்ளது. கனமழை எச்சரிக்கையை வானிலை மையம் அறித்துள்ளது.

அதை சமாளிக்க புதுவை அரசு தயார் நிலையில் உள்ளது என்று முதலமைச்சர் நாராயணசாமி கூறினார்.

**தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது**

# ‘ரெட் அலர்ட்’; யாரும் அச்சப்பட தேவையில்லை: ஓ.பன்னீர்செல்வம் பேட்டி

திருச்சி, அக்.5–

தமிழகத்திற்கு ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளதால் தமிழக அரசு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது, பொதுமக்கள் யாரும் அச்சம் படவேண்டாம் என்று துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சென்னை செல்வதற்காக இன்று காலை திருச்சி விமான நிலையத்திற்கு வந்த துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தை அமைச்சர் வெல்லமண்டி என். நடராஜன், புறநகர் மாவட்ட செயலாளர் டி. ரத்தினவேல் எம்.பி., மாநில அமைப்பு செயலாளர் மு. பரஞ்சோதி, முன்னாள் அமைச்சர் டி.பி.பூனாட்சி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முசிறி ரத்தினவேல், புறநகர் மாவட்ட பேரவை செயலாளர் கிருஷ்ணன், புல்லட் ஜான், ரெங்கராஜ் மற்றும் நிர்வாகிகள் வரவேற்றார்கள்.

பின்னர் ஓ. பன்னீரசெல்வம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது:–

தமிழகத்தில் விடுக்கப்பட்டுள்ள ரெட் அலர்ட் குறித்து அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கையை எடுத்துள்ளது. அதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் யாரும் அச்சம் படவேண்டாம்.

டி.டி.வி. தினகரன் அணியைச் சேர்ந்த தங்க தமிழ்ச்செல்வன் கூறிய குற்றச்சாட்டு குறித்து என்ன பதில் சொல்ல இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் அளித்த பதில், அவர் குறித்த பேட்டி இன்னும் முழுமையாக நான் பார்க்கவில்லை. அதை பார்த்த பிறகு விரிவாக செய்தியாளர்களுக்கு பதில் சொல்கிறேன் என்று கூறினார்.



அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை, திருவள்ளூர் மேற்கு மாவட்ட துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள கமாண்டோ ஏ. பாஸ்கரன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தை அண்ணா தி.மு.க.வுடன் இணைக்க டிடிவி தினகரன் தூதுவிட்டார்

**அமைச்சர் தங்கமணி பரபரப்பு குற்றச்சாட்டு**

சென்னை,அக்.5–

ஒற்றுமையாக உள்ள முதல்வர் மற்றும்துணைமுதல்வரைபிரித்தாளும் சூழ்ச்சியில் தினகரன் ஈடுபட்டதாக மின்சாரத்துறை அமைச்சர் தங்கமணி குற்றம்சாட்டியுள்ளார்.

டி.டி.வி. தினகரன் ஆதரவாளரும் தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம். எல்.ஏ.வுமான தங்க தமிழ்ச்செல்வன் நேற்று தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளிக்கும் போது, 2017–ம் ஆண்டு ஜூலை 12 ம் தேதி, தர்ம யுத்தம் நடத்திக்கொண்டிருந்த ஓ.பன்னீர் செல்வம் தினகரனை சந்தித்து ஆட்சியமைக்க ஆதரவு கோரினார் என தெரிவித்தார்.

மேலும், முதல்வர் எடப்பாடி பழனிசாமியை ஆட்சியில் இருந்து இறக்கிவிட்டு, இருவரும் இணைந்து நல்லாட்சி வழங்கலாம் என்று தினகரனிடம் பன்னீர்செல்வம் கூறினார் எனவும் அவர் தெரிவித்தார். அவரது இந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இதற்கு பதிலளித்த மின்சாரத்துறை அமைச்சர் தங்கமணி, ஒற்றுமையாக உள்ள முதல்வர் மற்றும் துணை முதல்வரை பிரித்தாளும் சூழ்ச்சியில் தினகரன் ஈடுபட்டதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் குறிப்பிட்டுள்ளதாவது:–

கட்சிகளை இணைத்துவிட்டு நீங்களே முதல்வராக தொடருங்கள் என தினகரன் தூதுவிட்டார். ஒற்றுமையாக உள்ள முதல்வர் மற்றும் துணை முதல்வரை பிரித்தாளும் சூழ்ச்சியில் தினகரன் ஈடுபட்டுள்ளார். தினகரின் கோரிக்கையை அண்ணாதிமுக ஏற்காததாலேயே ஓ.பன்னீர் செல்வம் மீது பொய்யான பரப்புரை செய்யப்படுகிறது.

விரக்தியின் விளிம்பில் உள்ள தங்க தமிழ்செல்வன் உளறிக்கொண்டிருக்கிறார். சசிகலா குடும்பத்துக்கு எதிராக தர்மயுத்தம் நடத்திய பன்னீர் செல்வம் எப்படி தினகரனை சந்திப்பார் ? எனவும் அமைச்சர் தங்கமணி கேள்வி எழுப்பியுள்ளார்.



முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமியை தலைமைச் செயலகத்தில், முயற்சி மக்கள் அமைப்பின் தலைவர் என். சிதம்பரம், செயலாளர் எம்.எஸ். பரமசிவம் மற்றும் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அப்போது, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, முயற்சி மக்கள் அமைப்பின் ரத்த தான சேவையினை பாராட்டினார். திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.குணசேகரன் உடன் உள்ளார்.

# வாக்காளர் அட்டையை ஆதாருடன் இணைக்க கோரும் மனுவுக்கு 2 வாரத்தில் பதில் அளிக்க வேண்டும்

**மத்திய அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு**

சென்னை,அக்.5–

வாக்காளர் அடையாள அட்டையை ஆதார் எண்ணுடன் இணைக்க கோரும் மனுவுக்கு 2 வாரத்தில் பதில் அளிக்கும்படி மத்திய அரசு, தேர்தல் ஆணையம், ஆதார் ஆணையத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் எம்.எல்.ரவி தாக்கல் செய்த பொது நல மனுவில், "தேர்தலில் முறைகேடுகளை தவிர்க்கவும், போலி வாக்காளர்களை களையெடுக்கும் வகையில், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க உத்தரவிட வேண்டும். தற்போது, வாக்காளர் பட்டியலில் பலருக்கு இரண்டு இடங்களில் பெயர் உள்ளது. அதை தவிர்க்கவும் இதனை பயன்படுத்தி அரசியல் கட்சிகள் தேர்தலில் முறைகேடுகளில் ஈடுபடுவதை ஆதார் இணைப்பின் மூலம் தவிர்க்க முடியும். மேலும், போலி வாக்காளர் அட்டைகள் உள்ளிட்டவைகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். கடந்த ஆண்டு நடைபெற்ற சென்னை ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலின்போது பல வாக்காளர்கள் போலியாகவும், இரட்டை பதிவு மூலமாக இருப்பதாகவும் புகார் எழுந்தது.

அதன் அடிப்படையில் தொடர்ந்து வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், போலி மற்றும் இரட்டை பதிவுகளை நீக்க உத்தரவிட்டதன் பேரில், ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் நீக்கபட்டனர். இதேபோல் சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த ஆண்டை விட, தற்போதைய வரைவு வாக்காளர் பட்டியலில் சுமார் 2.7 லட்சம் வாக்காளர்கள் குறைந்துள்ளனர். இது அரசியல் கட்சியால் போலியாக சேர்க்கப்பட்டதாக இருக்கலாம். எனவே இதுபோன்ற முறைகேடுகள், போலிகள் சட்ட விரோத நடவடிக்கையை தவிர்க்க வாக்காளர் அட்டையுடன் ஆதாரை இணைக்க உத்தரவிட வேண்டும்.

மேலும், ஆதார் அட்டை இணைக்கும் வரை சட்ட மன்றம் மற்றும் பாராளுமன்றத்திற்கு இடைத்தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களை நடத்துவதற்கு தடை விதிக்க வேண்டும்" என மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதிகள் எஸ். மணிக்குமார், பி.டி. ஆஷா ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வாக்காளர் அடையாள அட்டையை ஆதாருடன் இணைக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்ததாகவும், ஆதார் தொடர்பான உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, பின்னர் சமீபத்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு அந்த நடவடிக்கைகளை நிறுத்தி விட்டதாகவும், இருப்பினும் வாக்காளர் அடையாள அட்டையை ஆதார் அட்டையுடன் இணைக்க தேர்தல் ஆணையம் ஆதரவு தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் இது சம்பந்தமாக தற்போதைய நிலையில் மத்திய அரசுதான் சட்டம் இயற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதையடுத்து உத்தரவிட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் மத்திய சட்ட அமைச்சகம், மத்திய உள்துறை மற்றும் ஆதார் ஆணையத்தையும் எதிர் மனுதாரர்களாக சேர்க்கவும், வழக்கு தொடர்பாக மத்திய அரசு, தேர்தல் ஆணையம் ஆகியவை இரண்டு வாரங்களில் பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தார்.

# சபரிமலை பாதுகாப்பு பணிக்கு 500 பெண் போலீஸ்

திருவனந்தபுரம்,அக்.5–

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும்அனுமதிக்கலாம்என்ற உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்ததை அடுத்து சபரிமலை பாதுகாப்பு பணிக்கு 500 பெண் போலீசாரை நியமிக்க திட்டமிட்டுள்ளனர்.

சபரிமலை சுவாமி அய்யப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களும் சாமி தரிசனம் செய்யலாம் என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு கேரளாவில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. ஆனாலும் கேரள அரசும் சபரிமலை அய்யப்பன் கோவிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவசம் போர்டும் சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவை அமல்படுத்த உடனடியாக நடவடிக்கையில் இறங்கி உள்ளன. இது தொடர்பாக ஆலோசனை கூட்ட ங்களும் நடத்தப்பட்டு அதில் முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சபரிமலை கோவில் நடைசாத்தப்பட்டுள்ளது. ஐப்பசி மாத பூஜைக்காக வருகிற 17 ந் தேதி மாலை 5.30 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. மறுநாள் 18 ந் தேதி முதல் பக்தர்கள் சுவாமி அய்யப்பனை தரிசனம் செய்வார்கள். சுப்ரீம் கோர்ட் உத்தரவு உடனடியாக அமலுக்கு வந்ததால் பெண்கள் சபரிமலை கோவிலுக்கு செல்ல இனி எந்த தடையும் இல்லை. அவர்கள் ஐப்பசி மாத பூஜையிலும் கலந்து கொள்ளலாம்.

அதே சமயம் சபரிமலையில் பெண்களுக்கு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டி இருப்பதால் அது தொடர்பான நடவடிக்கைகளும் மாநில அரசு, தேவசம் போர்டு சார்பில் செய்யப்பட்டு வருகிறது. சபரிமலை வரும் பெண் பக்தர்கள் பாதுகாப்புக்காக அதிக அளவு பெண் போலீசாரை பம்பை, சன்னிதானத்தில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டி.ஜி.பி. லோக்நாத் பெக்ரா தலைமையில் போலீஸ் அதிகாரிகள் ஆலோசனை கூட்டமும் நடத்தப்பட்டது. போலீஸ் நிலையம் வாரியாக பெண் போலீசை தேர்வு செய்து சபரிமலை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த இந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. சபரிமலை கோவில் நடை திறப்புக்கு 2 நாட்கள் முன்னதாக வருகிற 15 ந் தேதியே பெண் போலீசாரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபரிமலை பாதுகாப்பு பணிக்கு 500 பெண் போலீசாரை நியமிக்க திட்டமிட்டுள்ளனர். அவர்களில் 350 பேர் கேரளாவில் இருந்து பணி அமர்த்தப்படுவார்கள். மற்றவர்கள் வெளி மாநிலத்தில் இருந்து வரவழைக்கப்படுகிறார்கள்.

# கவர்னர் பதவிக்கு தகுதி இல்லாதவர் கிரண்பேடி

## முதல்வர் நாராயணசாமி கடும் தாக்கு

புதுச்சேரி,அக்.5–

எம்.எல்.ஏ. பேசியபோது மைக்கை துண்டித்த கவர்னர் கிரண்பேடி பதவிக்கு தகுதி இல்லாதவர் என்று நாராயணசாமி குற்றம் சாட்டியுள்ளார். சென்னை விமான நிலையத்தில் புதுவை மாநில முதல் வர் நாராயணசாமி நிருபர்களிடம் கூறியதாவது:–

புதுவை மாநிலத்தில் மழை, புயல், வெள்ளம் வந்ததால் மக்களை பாதுகாக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. தாழ்வான பகுதிகளில் உள்ள தண்ணீரை வெளியேற்றவும் இயல்பு வாழ்க்கை பாதிக்காமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. பேரிடர் குழு அமைக்கப்பட்டு உள்ளது. 24 மணி நேரமும் செயல்பட கூடிய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு உள்ளது.

வருவாய் துறை அதிகாரிகள், மின்சாரத்துறை, போலீஸ் இணைந்து செயல் படுவார்கள். உள்ளாட்சி துறையினர் தாழ்வான பகுதிகளில் உள்ள தண்ணீரை அகற்றும் பணியில் ஈடுபட வேண்டும். 24 மணி நேரமும் அதிகாரிகள் பணியில் கண்காணிப்புடன் இருக்க வேண்டும். 7 ந் தேதி 25 செ.மீ. மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டு உள்ளதால் புதுவை அதிகாரிகளுடன் பேசி முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஹைட்ரோ கார்பன் எடுப்பது தொடர்பாக மத்திய அரசு 2 ஆண்டுகளுக்கு முன் திட்டத்தை அறிவித்தது. தமிழகத்தில் 2 இடங்களிலும், புதுவை காரைக்கால் பகுதியிலும் எடுக்க அறிவித்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதமருக்கு கடிதம் எழுதியதால் காரைக்கால் பகுதியில் நிறுத்தப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் சிதம்பரம், நாகப்பட்டினம் பகுதியில் ஹைட்ரோ கார்பன் எடுக்க வேதாந்தா குழுமத்துடன் ஒப்பந்தம் போட்டு இருப்பதாக தகவல் வந்து உள்ளன. இதனால் தமிழகத்திற்கு எந்தவிதமான பயனும் இல்லை. மக்களுக்கு எதிரான திட்டங்களை மத்தியில் உள்ள பாரதீய ஜனதா அரசு தமிழகத்தில் படிப்படியாக நிறைவேற்றி வருகிறது. இதனால் மக்கள் மத்தியில் பாரதீய ஜனதா கட்சி மீது வெறுப்பு ஏற்பட்டு உள்ளது.

**மக்கள் மீது திணிக்க கூடாது**

ஹைட்ரோ கார்பன் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் அப்பகுதி மக்களை அழைத்து பேசி அவர்களது கருத்துக்களை கேட்டு ஒப்புதலுடன் செய்து இருக்க வேண்டும். எந்தவொரு திட்டத்தையும் மக்கள் மீது திணிக்க கூடாது. புதுவையில் திறந்த கழிப்பிடம் இல்லாத மாநிலம் என்று அறிவிக்கும் விழாவில் அன்பழகன் எம்.எல்.ஏ. பேசும்போது கவர்னர் ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. பேசுவதை நிறுத்துமாறு சொல்லி மைக்கை அணைத்தால் அன்பழகன் ஆத்திரப்பட்டு பேசியுள்ளார்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி பற்றி பேசும்போது கவர்னர் வாய்ப்பு அளித்து இருக்க வேண்டும். அவர் பேசியபின் பதிலளித்திருக்கலாம். மைக்கை அணைக்க கவர்னர் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் மேடையில் அமைச்சர் நமச்சிவாயத்திடம் சட்டமன்ற உறுப்பினர் தவறாக நடந்து கொண்டதையும் ஏற்க முடியாது. இது சம்பந்தமாக விசாரித்து என்ன செய்ய முடியுமோ அதை செய்வோம். பொது இடங்களில் நடக்கும் விழாக்களில் இதுபோன்ற சம்பவங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

**கவர்னருக்கு உரிமை இல்லை**

சட்டமன்ற உறுப்பினருக்கு பேச உரிமை உண்டு. கவர்னர் தனது அதிகாரத்திற்குட்பட்டு செயல்பட வேண்டும். பேசக்கூடாது என்று மைக்கை அணைக்க கவர்னருக்கு எந்த உரிமையும் கிடையாது. ஒரு உறுப்பினர் தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பேசியிருக்க வேண்டும். அதிகமாக பேச நேரம் தந்திருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் உரிமையை யாரும் பறிக்க கூடாது. அதுப்போல் அமைச்சரின் மதிப்பை உறுப்பினர் குறைக்க கூடாது.

சமுதாயத்தில் அவரவர் தங்கள் அதிகாரத்துக் குட்பட்டு செயல்பட்டால் எந்த பிரச்சினையும் வராது. பொது விழாக்களில் கவர்னர் தொடர்ந்து அதிகார எல்லையை மீறி செயல் படுகிறார். அதிகாரமில்லாத இடங்களுக்கு சென்று ஆய்வு செய்து தன்னிச்சையாக உத்தரவிடுவது. அமைச்சருக்கு தெரியாமல் அதிகாரிகளை தனியாக அழைத்து கூட்டம் போட்டு பேசுவது. கவர்னர் அதிகார எல்லை மீறல் பற்றி பிரதமரிடமும் உள்துறை அமைச்சரிடமும் சொல்லியிருக்கிறேன்.

புதுவையில் காங்கிரஸ் அரசு இருப்பதால் தொல்லை தருவதற்காக இந்தம்மாவை அனுப்பி இருக்கிறார்கள். இவர் கவர்னர் பதவிக்கு தகுதி இல்லாதவர். அவரை திரும்ப பெற வேண்டும் என்று பிரதமரிடம் சொல்லியிருக்கிறேன். இதில் பிரதமர் என்ன செய்ய போகிறார் என்று தெரியவில்லை.

புதுவை மக்களுக்கு அவரால் எந்த பலனும் கிடையாது. எல்லா மக்களையும் துன்புறுத்தும் வேலையை தான் பார்த்துக் கொண்டு இருக்கிறார். அவருக்கு நிர்வாகம் தெரியவில்லை. ஒரு சில அதிகாரிகள் சொல்வதை கேட்டுக் கொண்டு நடக்கிறார். புதுவை சின்ன அமைதியான மாநிலம். மக்கள் அமைதியும் வளர்ச்சியையும் விரும்புகிறார்கள். அதற்கான திட்டங்களை நாங்கள் நிறைவேற்றுகிறோம். அந்த திட்டங்களை நிறைவேற்றும் போது முட்டுக்கட்டையை தான் போடுகிறார். மக்கள் நல திட்டங்களை நிறைவேற்றும் எண்ணமே கிடையாது.

விளம்பரம் வேண்டும், செய்திகளில் பெயர் வர வேண்டும், பிரதமருக்கு டுவிட்டரில் தகவல் அனுப்புவது மட்டும் தான் கவர்னர் வேலையாக இருக்கிறார். சட்டமன்றம் இருக்க கூடிய யூனியன் பிரதேசங்களில் அன்றாட செயல்பாடு நிர்வாகத்தை நடத்த அந்தந்த துறை அமைச்சருக்கும், முதல்வருக்கு அதிகாரம் உண்டு. கவர்னருக்கு தனிப்பட்ட அதிகாரமும் கிடையாது. தன்னிச்சையாக எந்தவொரு உத்தரவும் போட முடியாது.

கவர்னர் மாநில வளர்ச்சிக்கு குந்தகம் விளை விக்க கூடாது என்று உச்சநீதிமன்ற தீர்ப்பு உள்ளது. நீதிமன்ற தீர்ப்பையும் மக்களையும் கவர்னர் அவமதிக்கிறார். 2 ஆண்டுகளாக புதுவை மாநிலத்தை பற்றி தெரியாமல் அதிகாரிகளை அழைத்து கூட்டம் போட்டு அரசின் செயல்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கிறார். இது தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.


**PUBLIC NOTICE**

This is to inform the general public that my client Mr.Siddhant Sailesh Hindoocha, Proprietor M/s.Shri Raman Developers, having its office at Old No.6, New No.13, Waddels Road, Opp. Bains School, Kilpauk, Chennai 600010, is the owner in respect of Flat No.4, II floor, "Indirani" Old Door No.12, New Door No.35, Arya Gowda Road, West Mambalam, Chennai 600033 he having acquired the same from Mrs.Swapna V Shah, by way of sale vide Document No.1879 of 2016 on the file of the Sub Registrar, T.Nagar, Chennai and has been in possession and enjoyment of the same since then.

It is informed that my client Mr. Siddhant Sailesh Hindoocha, has lost the original title deed Document No.770 of 2015 on the file of the Sub Registrar, T.Nagar, Chennai, while he was riding as a pillion at Arya Gowda Road, West Mambalam, Chennai 600033 on 25.09.2018. The same could not be traced by him in spite of diligent search. My client states that he has not created any encumbrance, charge or mortgage on the said property. Those who find the above document is requested to hand over the same either to me at the below mentioned address (or) to my client at the above address. If inspite of this notice, anyone misuses the said document and creates any sort of encumbrances, he/she will be doing so at his/her own risks and costs and all such actions will not bind my client in any way.

**G.Ramalingam**
Advocate & Notary Public
Egmore Bar Association



IDFC BANK

**ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்**

CIN: U65110TN2014PLC097792 email: bank.info@idfcbank.com, Website: www.idfcbank.com
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 7வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022
கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், C-32, G-பிளாக், பந்த்ரா-குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா(E), மும்பை-400 051. தொலைபேசி எண்: + 91 22 7132 5500 பேக்ஸ்: + 91 22 2654 0354

**அறிவிப்பு**

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 29 மற்றும் விதி 47 (1) (ஏ) ஆகியவற்றின்படி, இதர அலுவல்களுக்கு இடையே செப்டம்பர் 30, 2018 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தணிக்கையாளர்களின் மறுவரையறுக்கப்பட்ட ஆய்விற்குட்பட்டது) விவாதித்து ஒப்புதல் வழங்க ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டின் (‘‘பேங்க்’’) குழு கூட்டம் **புதன்கிழமை, அக்டோபர் 24, 2018** அன்று மும்பையில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் மீது முதலீட்டாளர்/ ஆய்வாளர் அழைப்பு கூட்டத்தை வியாழக்கிழமை அக்டோபர் 25, 2018 அன்று வங்கி நடத்தும். மேற்சொன்ன கூட்ட அறிவிப்பு மற்றும் அழைப்பு விவரங்கள் வங்கியின் இணையதளம் (www.idfcbank.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் பிஎஸ்சி லிமிடெட்டின் இணையதளம் (www.bseindia.com) ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது.

**ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்/–**
**மஹேந்திரா N. ஷா**
குழும கம்பெனி செயலாளர் மற்றும் குழும ஒப்புதல் அதிகாரி

இடம்: மும்பை
தேதி : அக்டோபர் 4, 2018